# பெரியாழ்வார் திருமொழி 2-6
## வேலிக்கோல்
(காக்கையை கண்ணனுக்குக் கோல்கொண்டுவர விளம்புதல்)

172 * வேலிக்கோல் வெட்டி * விளையாடு வில்லேற்றி *
தாலிக் கொழுந்தைத் * தடங்கழுத்திற் பூண்டு **
பீலித் தழையைப் * பிணைத்துப் பிறகிட்டு *
காலிப்பின் போவாற்கு ஓர் கோல் கொண்டு வா * கடல்நிற
வண்ணற்கு ஓர் கோல் கொண்டு வா (1)

173 கொங்கும் குடந்தையும் * கோட்டியூரும் பேரும் *
எங்கும் திரிந்து * விளையாடும் என் மகன் **
சங்கம் பிடிக்கும் * தடக்கைக்குத் தக்க * நல்
அங்கமுடையதோர் கோல் கொண்டு வா * அரக்கு
வழித்ததோர் கோல் கொண்டு வா (2)

174 கறுத்திட்டு எதிர் நின்ற * கஞ்சனைக் கொன்றான் *
பொறுத்திட்டு எதிர் வந்த * புள்ளின் வாய் கீண்டான் **
நெறித்த குழல்களை * நீங்க முன்னோடி *
சிறுக் கன்று மேய்ப்பாற்கு ஓர் கோல் கொண்டு வா * தேவ
பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா (3)

175 ஒன்றே உரைப்பான் * ஒருசொல்லே சொல்லுவான் *
துன்று முடியான் * துரியோதனன் பக்கல் **
சென்று அங்குப் பாரதம் * கை எறிந்தானுக்கு *
கன்றுகள் மேய்ப்பதோர் கோல் கொண்டு வா * கடல்நிற
வண்ணர்க்கு ஓர் கோல் கொண்டு வா (4)

176 சீரொன்று தூதாய்த் * துரியோதனன் பக்கல் *
ஊரொன்று வேண்டிப் * பெறாத உரோடத்தால் **
பாரொன்றிப் பாரதம் * கை செய்து பார்த்தற்குத் *
தேரொன்றை ஊர்ந்தாற்கு ஓர் கோல் கொண்டு வா * தேவ
பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா (5)

177 ஆலத்திலையான் * அரவினணை மேலான் *
நீலக் கடலுள் * நெடுங்காலம் கண் வளர்ந்தான் **
பாலப் பிராயத்தே * பார்த்தர்க்கு அருள் செய்த *
கோலப் பிரானுக்கு ஓர் கோல் கொண்டு வா * குடந்தைக்
கிடந்தார்க்கு ஓர் கோல் கொண்டு வா (6)

178 பொன் திகழ் * சித்திரகூடப் பொருப்பினில் *
உற்ற வடிவில் * ஒரு கண்ணும் கொண்ட ** அக்
கற்றைக் குழலன் * கடியன் விரைந்து உன்னை *
மற்றைக் கண் கொள்ளாமே கோல் கொண்டு வா *
மணிவண்ண நம்பிக்கு ஓர் கோல் கொண்டு வா (7)

179 மின்னிடைச் சீதை பொருட்டா * இலங்கையர் *
மன்னன் மணி முடி * பத்தும் உடன் வீழ **
தன்னிகரொன்றில்லாச் * சிலைகால் வளைத்திட்ட *
மின்னு முடியற்கு ஓர் கோல் கொண்டு வா * வேலை
அடைத்தாற்கு ஓர் கோல் கொண்டு வா (8)

180 தென்னிலங்கை மன்னன் * சிரம் தோள் துணி செய்து *
மின்னிலங்கு பூண் * விபீடண நம்பிக்கு **
என்னிலங்கு நாமத்தளவும் * அரசென்ற *
மின்னிலங்காரற்கு ஓர் கோல் கொண்டு வா * வேங்கட
வாணர்க்கு ஓர் கோல் கொண்டு வா (9)

181 * அக்காக்காய் நம்பிக்குக் * கோல் கொண்டு வாவென்று *
மிக்காளுரைத்த சொல் * வில்லிபுத்தூர்ப் பட்டன் **
ஒக்க உரைத்த * தமிழ் பத்தும் வல்லவர் *
மக்களைப் பெற்று * மகிழ்வர் இவ்வையத்தே (10)